[திரு. எம். ஆறுமுகம்] [2012 ஏப்ரல் 3

காலியாகவுள்ளன. மருத்துவர், செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில், தொழிலாளர் நல வாரியங்கள் அனைத்தும் செயல்பட வேண்டும். தொழிலாளர்களுக்கென்று இருக்கக்கூடிய Labour Welfare Board, Plantation Welfare Board போன்ற வாரியங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4–4–2012) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

13. (i) 8–8–2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவப/52(a)/2007 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்தும்; (ii) 4–1–2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவப/(b)/2007 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்தும்; (iii) 10–6–2009ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவப/13/2009 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்தும்; மற்றும் (iv) 21–3–2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவ/(14(a-2)/2003 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்தும்; வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 11–7–2011 ஆம் நாளிட்ட 75–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2012 ஏப்ரல் 3]

14. (i) யாதொரு வணிகர், திருவாளர்கள் பாரத் சன்சார் நிகம் லிமிடெட், விதேஷ் சன்சார் நிகம் லிமிடெட் மற்றும் மகாநகர் டெலிபோன் நிகம் லிமிடெட் ஆகியோருக்கு விற்பனை செய்யப்படும் அறிவிக்கை–I–ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் மீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (ii) அறிவிக்கை–II–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, முதலாவது விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு பொருட்களை இந்திய இரயில்வே துறை மற்றும் தமிழ்நாட்டிலுள்ள ஏனைய மாநில அரசுகளின் துறைகள் உட்பட மாநில மற்றும் மத்திய அரசுத் துறைகளுக்கு விற்பனை செய்வதற்குரிய வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (iii) யாதொரு வணிகர், அறிவிக்கை–III–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் நீங்கலான ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகர், அறிவிக்கை–IV–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, அறிவிக்கை–IV–ல் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்ததாரர்களால் ஆயத்த அடிப்படையிலான திட்டங்களில் பயன்படுத்துவதற்கான ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; மற்றும் (v) யாதொரு வணிகர், அறிவிக்கை–V–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் நீங்கலான யாதொரு பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் *11–7–2011* ஆம் நாளிட்ட *77*ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

15. (i) யாதொரு வணிகர், அறிவிக்கை–I–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (ii) யாதொரு வணிகர், அறிவிக்கை–II–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, உயர் இரக மண்ணெண்ணெய் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (iii) யாதொரு வணிகர், அறிவிக்கை–III–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகர், அறிவிக்கை–IV–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (v) யாதொரு

வணிகர், அறிவிக்கை–V–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, கட்டுமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களைப் பயன்படுத்துவதற்குரிய உரிமை குறித்து செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (vi) மோட்டார் வண்டிகளின் விற்பனையாளர் அல்லாத யாதொரு வணிகர், அறிவிக்கை–VI–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு மாநிலத்திற்குள் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வண்டிகளின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (vii) யாதொரு வணிகர், அறிவிக்கை–VII–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு மாநிலத்தில் மின் அனுப்புகை ஏற்பாட்டு முறையில் பயன்படுத்துவதற்காக, சென்னை திருவாளர்கள் இந்திய மின் கட்டமைப்புக் கழகத்திற்கு பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் நீங்கலாக செய்யப்படும் யாதொரு பொருள் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (viii) யாதொரு வணிகர், வணிகப் பெயரில் விற்பனை செய்யப்பட்ட பன்கள், ரஸ்குகள், பிஸ்கெட்டுகள் மற்றும் கேக்குகள் உட்பட பேக்கரி பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (ix) யாதொரு வணிகர், அறிவிக்கை–IX–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (x) யாதொரு வணிகர், அறிவிக்கை–X–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; மற்றும் (xi) உதகமண்டலம், திருவாளர்கள் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்பு நிறுவனம் செய்யும் மருத்துவ எக்ஸ்–கதிர் படச்சுருள் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 11–7–2011 ஆம் நாளிட்ட 78ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

16. 11–7–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவப/12 (R-27)/2011 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 12–7–2011 ஆம் நாளிட்ட 81 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

2012 ஏப்ரல் 3]

17. (i) *யாதொரு வணிகர், அறிவிக்கை–I–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, மாநில மற்றும் மத்திய அரசுத் துறைகள், இந்திய இரயில்வே உள்பட மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பிற மாநிலத் துறைகளுக்கு பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் தவிர ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; மற்றும்* (ii) *11–7–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–*II, *பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின்* II*(1)/வவப/12 (*R*-20)/2011 ஆம் எண் அறிவிக்கைக்கு மாற்றம் செய்தது குறித்தும்; வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 19–7–2011 ஆம் நாளிட்ட 86 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*18. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்களின் எண்ணிக்கையினை நிர்ணயித்தல் மற்றும் வார்டுகள் பிரித்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பிஆர்–*II*) துறையின் 14–9–2011 ஆம் நாளிட்ட 63 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

19. வணிக வரி மற்றும் பதிவுத் (சி2) துறையின் 13–7–2011 ஆம் நாளிட்ட 83 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் பணியாளர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஓட்டல்களில் செலுத்தத்தக்க ஆடம்பர வரியை செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–